Newsp
aper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருகூ] யாழ்ப்பாணம்—சர்வசித்து ஞூ ஆனி மீ கஎ ௳ (1947 ஜூலை 1 செவ்வாய்க்கிழமை) [இல உரு

## பிரார்த்தனை

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே யுன்னை யோலமிட் டலறி
யுலகெலாந் தேடியுங் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருத்தனே யடியே னுதரித் தழைத்தால்
அதெந்துவே யென்றரு ளாயே.

## முழுப் பொய்!

### டக்ரர் விக்கிரமசிங்ஹ விளக்கம்

சென்ற 18-6-47ல் அரசாங்கசபை முதல்வர் மிஸ்ரர் சேனநாயக்காவினால் நிகழ்த்தப்பட்ட விருந்துபசாரக் கூட்டத்தைத் தாம் பகிஷ்கரிப்பதாகத் துண்டுப் பிரசுரம் விடுத்துவிட்டுப் பின், அந்த உபசாரத்தில், இலங்கை சமதர்மக் கட்சித் தலைவர் டக்ரர் எஸ். ஏ. விக்கிரமசிங்ஹ பங்குபற்றினார் என்று டெயிலிநியூஸ் பத்திரிகையில் அரசியல் நிருபர் எழுதியதை நாமும் அநுவதித்து வெளியிட்டுள்ளோம். டெயிலிநியூஸ் அரசியல் நிருபர் கூறியன அனைத்தும் முழுப்பொய் என்றும், தாம் அந்த விருந்துபசாரத்திற்குப் போகவேயில்லை என்றும், டக்ரர் விக்கிரமசிங்ஹ எமக்கு ஓர் கடிதம் எழுதியுள்ளார்: அவர் அதிற் குறிப்பிடுவதாவது:

'நான் விடுத்த துண்டுப் பிரசுரத்திற் காட்டிய அதே காரணங்களை முன்னிட்டு, குறித்த விருந்துபசாரத்திற்குப் போகவேயில்லை. எங்கள் கட்சி (சமதர்மக் கட்சி)மீது பொறாமையும் துவேஷமும் கொண்டு எழுதிவரும் ஒருவரின்கூற்றில் நம்பிக்கை வைத்து அவர் எழுதியதைத் தாங்களும் அநுவதித்து வெளியிட்டதை யிட்டு ஆச்சரியப்படுகிறேன்."

## தேசாதிபதியின் லண்டன் விஜயம்

கடந்த ஜூன்மாதம் 18ந் திகதி வெளியான இலங்கை யரசியல் சம்பந்தமான அறிக்கையிற் காட்டப்பட்டுள்ள உடன்படிக்கைப் பிரச்சினைகளைப்பற்றிக் கலந்து பேசுதற்காக, இலங்கைத் தேசாதிபதியைக் குடியேற்றநாட்டு மந்திரி அழைத்திருக்கிறார். வருகிற 4ந் திகதி தேசாதிபதி லண்டனுக்குப் பிரயாணமாவார். அவர் அங்கே மூன்றுவாரம்வரை தாமதித்து நிற்பர். அவர் மீண்டு வரும்வரை, இலங்கைப் பிரதம நீதிபதி, தேசாதிபதியாகக் கடமைபார்ப்பார் என்று ஓர் அறிக்கை கூறுகிறது.

## ருஷியப் பூச்சாண்டி

### இந்தியாமீது படையெடுக்குமா?

இந்தியா சுதந்தரநாடாகி விட்டால் ரஷ்யா படையெடுக்குமென்று அநேகர் பயமுறுத்தி வருகின்றனர். ரஷயா சமீபகாலத்திலாவது, வேறு எந்தச்சமயத்திலாவது படையெடுக்க முடியாது என்று அமெரிக்க பத்திரி நிபுணர் லூயி பிஷர் எழுதியுள்ளார். அவர் சோவியத் அன்னிய நாட்டுக் கொள்கையை நன்றாய் ஆராய்ந்தறிந்திருக்கிறார் ரஷ்யா இந்தியாமீது படை எடுக்கும் என்று நினைப்பது வீண் பிரமையாகுமென்று கூறுகிறார். மாஸ்கோ இம்மாதிரி நடவடிக்கை எடுக்கக் காரணமென்ன வென்று தெரியவில்லை. அது வெறும் பைத்தியக்காரத் தனமாகும் என்கிறார்.

சோவியத் யூனியன், இரண்டாவது உலக யுத்தத்தில், மற்ற தேசங்களைப்போல, அதிக கஷ்டப்பட்டிருக்கிறது ஹிட்லரைத் தோற்கடிக்க ரஷ்யாதான் பெரிய பங்கெடுத்துக்கொண்டது அதனால் அநேகர் மாண்டனர். 1941க்கும் 1945க்கும் மத்தியில் ஒன்றரைக்கோடி மக்களும் ராணுவத்தினரும் இறந்திருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. நாஜிகள் சோவியத் யூனியனின் பெரும் பகுதிகளை அழித்து விட்டார்கள். அநேக தொழிற்சாலைகளும், பண்ணைகளும் நாசமாகிவிட்டன.

யுத்தத்தினால் சேதப்பட்டதைச் சரிப்படுத்த ரஷ்யாவுக்கு 15 வருஷங்களாவது பிடிக்கும், இந்நிலையில் ரஷ்யத் தலைவர்கள் ராணுவ நடவடிக்கை எடுப்பார்களென்பது வீண் கனவு.

இந்தியாமீது ரஷ்யா படையெடுப்பது லேசான காரியமல்ல. ரஷ்யாவும் அநேக தடவைகள் படையெடுத்தாகிவிட்டது. கடைசியாகப் படையெடுத்த போர்த்துக்கீய, பிரஞ்சு, பிரிட்டிஷ் படையெடுப்புகளைத் தவிர பாக்கி 26 அந்நியப்படை யெடுப்புகளும் இப்பொழுது சோவியத் பிரதேசமாயிருக்கிற பாகத்தின் வழியாகத்தான் நடந்திருக்கின்றன.

ரஷ்யர்களைக் கண்டால் பிரிட்டிஷாருக்குப் பயந்தான் கர்ஸான்பிரபுவே, "மனிதனைப்போல நடக்கும் கரடியைக் கண்டு" பயந்தார். "இந்தியா இல்லாவிட்டால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யமேபோம்" என்றார். கீர்த்தி பெற்ற ரஷ்ய ஜெனரல் ஸ்கோபொ

## ஜீவன் முக்தன்

[டி. ஆர். ராமநாத சாஸ்திரி]

உலகில் எல்லா மனிதர்களும் அடையவேண்டிய அறம், பொருள் இன்பம், வீடு என்ற நான்கு நிலைகளில் வீடு எனப்படும் மோக்ஷம் என்பது கடைசி நிலையாகும் அதை அடைந்தவன் உண்மை அறிவு பெற்றவனாகிறான். அவன் இவ்வுலகிலும், வேறு உலகங்களிலும் ஏற்படக்கூடிய எல்லாத் துன்பங்களிலிருந்தும் விடுபடுகிறான். எப்பொழுதும் பேரின்பம் நிறைந்தவனாகிறான். பெரிய சிறையாகிய உலகிலிருந்து விடுதலை பெறுகிறான். (மோக்ஷம் – விடுதலை) அந்தநிலையை அடைவது இருவகைப்பட்டது, பல யோகிகள் தவம் முதலிய வழிகளினால் உண்மை அறிவு பெற்று இவ்வுடலை நீக்கி, மறுபிறவி எடுக்காது மோக்ஷ நிலையைப் பெறுகின்றனர்; வேறு சிலர் இவ்வுலகில் தாம்பெற்ற மானிட உடலை விட்டுப் பிரிவதற்கு முன்பே அந்நிலையை எய்திவிடுகின்றனர் அவர் ஜீவன் முக்தர் எனப்படுகின்றனர். (உலகில் வாழ்ந்துகொண்டே விடுதலை பெற்றவர்) ஸ்ரீ ஸதாசிவப் பிரும்மம், ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்ஸர் முதலியபெரியோர் இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவர் ஆவர்.

இந்த இரண்டாவது பிரிவான ஜீவன் முக்தரின் நிலையை எய்துவதில் ஏழு படிகள் இருக்கின்றன. உண்மை அறிவு பெற்றவன் அவற்றில் முறையே ஏறிச்செல்கிறான்.

1. உலகில் காணப்படும் பொருள்களை நன்கு ஆராய்ந்து, எந்தப்பொருள் அழியக்கூடாதது என்பதைக் கண்டு அழிவுபெற்ற, இவ்வுலகில் பிறந்து பெறும் துன்பங்களிலிருந்து விடுதலை பெற்றாகவேண்டும் என்று உறுதியாக ஏற்படும் விருப்பம் முதற்படியாகும்.

2. பிறகு விடுதலை பெற வழி எங்கே உளது, அதை எவர் எனக்குக் காண்பிக்கக்கூடும்? என்று பன்முறை முயன்று தக்க குருதேவரை நாடி, அவர் உபதேசிக்கும் வேதாந்த நூல்களின் சாரமான வாக்கியங்களைப் பற்றுடன் கேட்பதும் பன்முறை அவற்றை நினைத்துப் பார்ப்பதும் இரண்டாவது படியாகும்.

3. இம்மாதிரிப் பன்முறை நினைத்துப் பார்ப்பதனால் மனதை ஒரே பொருளில் (லக்ஷ்யத்தில்) அசைவற்று நிற்கச்செய்து, சூக்ஷ்மமான பரம்பொருளை அறிந்துகொள்ளும்திறமை பெறுவது மூன்றாவது படியாகும்.

4. பிறகு எவ்விதமான ஐயமும் மாறுபாடும் இல்லாமல், பிரமமும் தானும் ஒன்றுதான் என்று ஏற்படும் உணர்ச்சி (நிர்விகல்ப சமாதி) நான்காவதுபடியாகும், இந்நிலையை அடைந்தவன்தான் உண்மை ஞானியாகிறான்.

5 இப்படிப் பன்முறை முயன்று உணர்ச்சி (நிர்விகல்ப சமாதியின்) யைப் பெற்றபின்பு மனசு ஒரே ஒழுங்கைப் பெற்றுவிடுகிறது. ஆதலால் இடைவிடாமல் அந்த உணர்ச்சி (நிர்விகல்பம்) தொடர்ந்து வருவது ஐந்தாவது படியாகும்.

6 பிறகு நிர்விகல்ப உணர்ச்சிஎன்றும் மாறாமல் நிலைபெற்றுத் தொடர்ந்து வருவது ஆறாவது படியாகும்.

7 எக்காரணத்தாலும் நிர்விகல்ப உணர்ச்சி மாறாமல் இருப்பது ஏழாவது படியாகும.

சாதாரண உலக வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் மூன்று நிலைகள் இருக்கின்றன. (1) விழிப்பு நிலை, (2) கனவுநிலை, (3) தூக்கநிலை. இவற்றை யாரும் எளிதில் அறியக்கூடும் ஜீவன் முக்தனுடைய ஏழு படிகளில் முதல் மூன்று படிகளில் யோகி விழிப்புநிலையில் இருக்கிறான். அவன் உலகமிருப்பதாக அறிகிறான். அது அழிவுபெற்றது என்று அறிந்து, கடவுள் ஒன்றுதான் அழிவுபெறாத பொருள் என்றும் அறிவதனால் அவை ஜீவன் முக்தனின் விழிப்பு நிலையில் ஏற்படுகின்றன: அப்பொழுது அவன் ஸவிகல்ப சமாதியைத்தான் பெறுகிறான்.

கனவுநிலையில் பொருள்களைக்காண்கிறான்; உண்மைபோலத் தோன்றினும் அவை பொய்யென்றும் உணர்ந்துகொள்கிறான். அதைப்போல்நான்காவது நிலையில் தன்னைச் சுற்றியுள்ள உலகைக் கனவிலுள்ள பொருள்களைப்போல் அறிந்து எங்கும் பரவியுள்ள அழியாத பொருளே தான் என்று அறிகிறான். இங்கும் பொய்யான உலகம் இருக்கிறது என்று உணர்ச்சி ஏற்படுவதனால் இது கனவு நிலையாகும்,

தூக்க நிலையில் உலகம் ஒன்று உண்டு என்ற உணர்ச்சியே ஏற்படுவதில்லை, அதைப்போல 5, 6, 7 வது படிகளில் உள்ள யோகி பொய்யாகவோ உண்மையாகவோ உலகம்ஒன்றுண்டு என்ற உணர்ச்சியைப் பெறுவதேயில்லை. இம் மூன்று படிகளில் இருப்பவர்கள் ஜீவன் முக்தர்களிற் சிறந்தவர்களாவர்; இம்மூன்று படிகளிலும் சிறிது வேற்றுமை உண்டு,

ஐந்தாவது படியில் உள்ள யோகி சிற்சில சமயங்களில் சமாதியிலிருந்துவிலகி உலகினருடன் பழகுவான். இது தூக்கநிலையாகும். ஆறாவது படியில் உள்ள யோகி பிறருடைய தூண்டுதலினால் சிலசமயம்சமாதியிலிருந்து கலைந்து மறுபடியும் சமாதியில் ஆழ்ந்துவிடுகிறான். இது அடர்த்தியான தூக்கநிலையாகும். ஏழாவது படியில் உள்ளயோகி தானாகவும், பிறருடைய தூண்டுதல்களினாலும சமாதி நிலையிலிருந்து நழுவுவதேயில்லை: தான், உலகம் கடவுள் என்ற வேற்றுமை உணர்ச்சியற்றுத் தன் முயற்சி சிறிதும் இன்றியே மெய்ப்பொருள் உருவமாக மாறிவிடுகிறான். அவன் உயிர் வாழ்வது எம்பெருமான் திருவருளினால்தான். அவனுடைய வாழ்க்கைக்கு அவசியமான உண்பதும் நீர்பருகுதலும்கூடப் பிறருடைய உதவியினால் நடைபெறுமாறு விட்டுவிடுகிறான். அவன் எங்கும் எப்பொழுதும் மகிழ்ச்சி யுருவமாக விளங்குகிறான். இது மிக்க அடர்த்தியான தூக்கநிலையாகும். பெரியோர்களின் வாழ்க்கைக் குறிப்புகளில் இந்நிலைகளுக்கு உதாரணங்கள் பல இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஸூ ஆனிமீ களஉ செவ்வாய்க்கிழமை


## திருவாங்கூர் சமஸ்தானம்

பழைய சேரநாட்டினைச் சேர்ந்துள்ளதாகிய திருவாங்கூருக்கும் இலங்கைக்கும் அதிக தொடர்புண்டெனலாம்; இலங்கையிலுள்ள பழைய தமிழர்களுள் ஒரு பகுதியினர் திருவாங்கூர் முதலிய சேரநாட்டிலிருந்து வந்து யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலுங் குடியேறினரென்று இலங்கை இந்திய சரித்திர நூல்கள் கூறியிருப்பதையும் பார்க்கலாம்; மேலும் சேரநாட்டு மக்களின் பேசும் பாஷையாகிய மலையாள மொழிக்குத் தமிழ் மொழியே தாய்மொழியாகுமென்பது எவருமறிந்த விஷயம்; இப்பொழுதும் மலையாளத்திலிருந்து இலங்கையில் வந்து குடியேறியிருக்கும் மக்களின் தொகை அதிகமாகும்; இலங்கைக்கும், இலங்கையுள்ளும் விசேஷமாக வட இலங்கைக்கும் வியாபார விஷயத்தில் நெருங்கிய தொடர்பு உண்டு; சுருங்கச் சொல்லுகில் இந்திய தேசத்திலுள்ள ஏனைய நாடுகளைக் காட்டிலும் மலையாள நாட்டுக்கும் வட இலங்கைக்குமிடையே பல்லாற்றானும் அதிக தொடர்பும் போக்குவரவு முண்டென்று சொல்லலாகும். மலையாள நாட்டிற்கு நன்மை வரும்போது வடஇலங்கைமக்களுக்கு மகிழ்ச்சியுண்டாதலும்தீமைவரும்போது இங்குள்ளார்க்குக்கவலை நேர்தலும் இயல்பெனலாம்.

இப்பொழுது இந்தியாவிலுள்ள சுதேச மன்னர்கள் இந்திய "சமஷ்டி" அரசியலிற் சேர்ந்துகொள்ளும் நோக்கங் கொண்டவர்களாகவிருப்ப, இத் திருவாங்கூர் சமஸ்தானமும் ஹைதராபாத் ராஜ்யமுமே இந்திய சமஷ்டியிற் சேர்ந்து பரிபாலனஞ் செய்ய நோக்கங் கொள்ளாது மாறுபட்டு நிற்கின்றன; ஹைதராபாத்திலே இந்துமக்களின் தொகை அதிகமாகவும் இஸ்லாமிய மக்களின் தொகை விகிதத்தில்மிகக் குறைவாகவுமிருந்தாலுமதனை ஆளுஞ் சுதேசமன்னர் "நிசாம்" எனப்படும் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த பரம்பரையினராவர்; அந்த நிஸாம் இந்திய சமஷ்டி ராச்சியத்தினரோடு சேர்ந்து உழைப்பதைவிடுத்து தனிச்சுவாதீனத்தோடு தாம் வாழவேண்டுமென நினைத்தல் நூதனமல்ல; ஆனால்திருவாங்கூர்சமஸ்தானத்தினரும் அப்படிநோக்கங்கொள்ளுதல்வெகு நூதனமாகும். திருவாங்கூர் சமஸ்தானத்திலே பிரதமமந்திரியாக விருப்பவர் ஸேர். C.P.இராமசாமிஐயராவர்; இவர் இப்பொழுது மாத்திரமல்ல சென்ற சில வருடங்களாக இந்திய மகாநாட்டுக் கட்சியினர்க்குப் பிரதிகூலமாகவே கருமமாற்றத் தலைப்பட்டுள்ளார்; திருவாங்கூர்ச் சமஸ்தானத்திலே பல திருத்தங்களையும் விருத்தியையுஞ் செய்துகொண்டு வந்த ஸேர். இராமசாமி ஐயர், அச்சமஸ்தானத்திற்குத் தனிச் சுயராச்சியத்தைப் பெற்றுவிட வேண்டுமென்ற பேராசை கொண்டே, இப்படி இந்திய சமஷ்டி அரசியலோடு மாறுபடுகிறாரென்பது பலரறிந்த இரகசியம்; பாகிஸ்தான் தனிப் பரிபாலனத்தை வெகு பாடுபட்டு இப்பொழுது பெற்றுள்ள மிஸ்ரர் ஜின்னாவே, இந்திய சமஷ்டி பரிபாலனத்தை வெறுத்துத் தனியே நின்று காலகதியில் என் செய்வதென்றுதியங்கும்போது, ஸேர். இராமசாமி ஐயர், ஹைதரபாத் நிஸாமென்னுமிவர்கள் இந்திய சமஷ்டியரசியலைப் புறக்கணித்து நின்று காலகதியில் தத்தம் நாட்டிற்கு யாதும் பாதுகாப்பு நன்மை முதலியன செய்தல் முடியுமோ என்பது சந்தேகம்; காலஞ்செல்லஇவர்கள் மீண்டும்இந்திய சமஷ்டிஅரசினரிடம் வந்து சேருவார்களென்பது இருந்தறியவேண்டியது.

## சின்னத்தனமான செயல்

சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாணம் முற்றவெளியில் நிகழ்ந்த தமிழ்க்காங்கிரஸ் கூட்டத்தில் ஓர் சிலர் குழப்பம் ஏற்படுத்தச் செய்த முயற்சியை நாம் கண்டிக்காமலிருக்க முடியாது. இதேபோல, அதற்கு முதல் நாள், மந்துவிற் கிராமத்தில் ஐக்கிய தேசியக்கட்சி யாதரவில் நிகழ்ந்த ஓர் பாதுக்கூட்டத்தைக் குழப்ப முயன்ற சிலரின் செயலையும் நாம் பலமாகக் கண்டிக்கிறோம். ஒருவர் தன்னுடைய கட்சியைப்பற்றி நியாயமான முறையில், ஜனநாயகத்துவத்தை அடிப்படையாகக்கொண்ட தன்மையில் பேசவும் பிரசாரம் செய்யவும், எவ்வளவு உரிமையுடையரோ, அவ்வளவு உரிமை மற்றக் கட்சியினருக்கும் உண்டு என்பதை இந்நாட்டில் ஜனத்தலைவர்கள் என முற்படுவோர், அரசியலின் முதற்பாடமாகப் படித்து உணர்ந்துகொள்ளுதல் வேண்டும். உலகிற் கட்சிபேதம் இருக்கத்தான் வேண்டும். அரசியல் விஷயமாக, சமயவிஷயமாக, எல்லாரும் ஓர்வித அபிப்பிராயம் கொண்டிருக்க முடியாது. ஆனால் வேற்றுமையில் ஒற்றுமையைக் காண்பவரே பெரியார். அன்பை, அகிம்சையை, பரந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியற் கட்சிகள் எவ்வளவுக்கெவ்வளவு உண்டோ, அவ்வளவுக் கவ்வளவு பொதுஜனங்கள் நன்மையடைதல் வேண்டும்.

இந்த உண்மையை மறந்து பலாத்காரத்தையும், சின்னத்தனமான செயல்களையும் புரிந்து எதிர்க்கட்சியினர்க்கு வாய்ப்பூட்டு விதிக்க முயலுவோர் உண்மையான அரசியல் ஞானிகளாகார். இவர்கள் தங்கள் செயல்களினால் தமக்கோ, தாம் கொண்ட லட்சியத்துக்கோ ஓர்போதும் சேவை செய்தவராகமாட்டார். எங்கள் ஜனத்தலைவர்கள் அவர்கள் எக்கட்சியைச் சேர்ந்தவராயினுமாகுக, பொதுஜன சேவையினையே லட்சியமாகக் கொண்டு அன்புநெறியில் இந்தத் தேர்தற்காலத்தில் பொது ஜனங்களை நடத்துவர் என்று எதிர்பார்க்கிறோம்.

# குறிப்புக்கள்

### விஷமக் கட்டுரைகள்

கதிர்காமம் விஷயமாக மிஸ்ரர் பண்டாரநாயக்காவின் "சிங்ஹள பலயா" என்னும் பத்திரிகை கூறியதைக் கண்டித்துச் சென்றவாரம் குறிப்பிட்டிருந்தோம்; போக்குவரத்து மந்திரியும், ஐக்கியதேசியக்கட்சிப் பிரசாரகர்த்தாவுமான மிஸ்ரர் ஜே. எல் கொத்தலாவலையால் நடாத்தப்படும் "ஸியறற" என்னும் சிங்களப் பத்திரிகை இலங்கைவாழ் இந்தியரை மிகவும் கேவலமான முறையிற் கண்டித் தெழுதியுள்ளதை நம் சகோதரப் பத்திரிகை ஒன்று அறுவித்து இப்போது வெளியிட்டிருக்கிறது. தமிழ் மக்களுக்கும் சிங்களம் விளங்கும் என்பதை ஆங்கிலப் பத்திரிகைகளில் தேசியவாதமும் சிங்களப் பத்திரிகைகளில் வகுப்புவாதமும் கக்கும் சிங்களத் தலைவர்களுக்கு அறிவிக்க விரும்புகிறோம். சிறுபான்மையினர் வகுப்புவாதம் பேச, பிரசாரம் செய்யக் காரணம் இருக்கலாம; ஆனால் பெரும்பான்மை வகுப்பினர் சின்னத்தனமான முறையில் வகுப்புவாத நஞ்சைப் பரப்புதல் அவர்களுக்கே அநர்த்தம் விளைக்க ஏதுவாகும். இலங்கை எல்லார்க்கும் பொதுவான ஓர் தேசம். இங்கே வசிக்கும் தமிழ்மக்கள் சிறுபான்மையினர்தான்; ஆனால் அவர்களை உதாசீனப்படுத்தியோ, புறக்கணித்தோ, இராச்சியபாரம் நடாத்த முடியாது என்பதை வகுப்புவாதக் குழியிற் கிடக்கும் கொத்தலாவலைக்கோஷ்டி எவ்வளவுக்கெவ்வளவு உணருகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்கும் இந்நாட்டுக்கும் நன்மை பயக்கும்.

* * *

### கடலேரித் திட்டம்

வடமராட்சிக் கடலேரித் திட்டம், அதாவது உப்புப் பரவையை நல்ல நீர்த் தேக்கமாக்கி அதன்மூலம் விவசாயத்தை விருத்தி செய்யுமதிட்டம், இந்த மாதத்திலேயே நடைமுறைச்குக் கொண்டுவரப்படும் என்பது நாம் அனைவரும் வரவேற்கவேண்டிய நல்ல செய்தியேயாகும். இத்திட்டம் முற்றாக உருவாகும் காலத்திலே 15,000 ஏக்க நிலத்துக்கு நீர்ப்பாசன வசதிகள் செய்யப்படும். யாழ்ப்பாணத்தின் பொருளாதார நிலைமை இன்று மிகவும் கேவலமாக இருக்கிறது. உத்தியோகம் மூலமாகப் பண வருவாய் இனி இங்கே கிடைக்கும் என எதிர்பார்ப்பது துர்லபம் மலாய் நாட்டு வருவாயும் மங்கிவிட்டது. புகையிலை, சுருட்டுத் தொழில்களும் அ[illegible]தாகதியடையும் நிலையில் இருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில், பூமி திருத்தி விவசாயத்தை விருத்தி செய்து எம் பொருளாதார நிலைமையைப் பாதுகாக்க வேண்டும். அதற்குத் தடையாகவிருந்தது நீர்ப்பாய்ச்சல் இல்லாமையே எனக. யாழ்ப்பாணக் கடலேரித் திட்டம், நிலாவரைத் திட்டம் என்பவற்றை அரசாங்கம் கூலிக்கு மாரடிப்பார்போன்று, அசிரத்தையுடன் நடத்தாது, யாழ்ப்பாணமக்களின் பொருளாதாரநிலைமையை உயர்த்தவேண்டும் என்னும் ஒரே நல்ல நோக்கம் கொண்டு, ஜரூராக நடத்தவேண்டும். "எங்களை நம்புங்கள்" என்று சிங்கள மந்திரிகள் வாய்ப் பேச்சளவுடன் நிற்கவொண்ணாது: தமிழ்மக்களுடைய மனப்பூர்வமான நம்பிக்கையைப் பெற இதுபோன்ற கருமங்களைச் சிரத்தையுடன் செய்யவேண்டும்,

* * *

### மூடுமந்திரம் ஏன்?

இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்படுவதுபற்றி அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ தலைவர் திரு. ஜீ, ஜீ. பொன்னம்பலம் ஓர் அறிக்கை வெளியிட்டார். அதனைச் சென்ற பிரசுரத்தில் நாமும் வெளியிட்டோம். இலங்கை அரசியல் விஷயமாக முன்னேறுவதில் அதற்குத் தடையாக எவரும் இருக்கமுடியாது. ஆனால் இந்தவிதமான ஓர் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையின்போது மிஸ்ரர் சேனநாயக்கா, மற்றவர்களையும கலந்துகொள்ளாமல், சகல வியவகாரங்களையும் ஆலோசனைகளையும் மூடுமந்திரமாக வைத்திருக்கவேண்டியதன் காரணம் என்ன என்று திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம்கேட்பதைஎவரும் ஆதரிக்கத்தான்வேண்டும். இந்தஇலங்கை மிஸரர் சேனநாயக்காவுக்கோ, சேர். ஒலிவர் குணதிலகாவுக்கோ முதுசொத்து அல்ல; சீதனப் பொருள் அல்ல; அவர்கள் தம் யதேச்சாதிகாரப்படி உடன்படிக்கைகள் செய்வதற்கும், அந்த உடன்படிக்கைகளைப்பிரிட்டிஷ் அரசாங்கம்சட்டபூர்வமாக்குதற்கும் இலங்கைமக்கள் யாவரினதும் அதிகாரபூர்வமான சம்மதம் வேண்டும். இலங்கையரசாங்கத்துக்கும் பிரிட்டிஷார்க்குமிடையே என்னவிதமான உடன்படிக்கைகள் செய்யப்படவேண்டும்? அந்தஉடன்படிக்கைகள் எத்தனை காலத்துக்கு அமுலில் இருக்கும்? பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து இலங்கை பிரிய உரிமையுண்டா? திருக்கோணமலை போன்ற கடற்படைத்தளங்கள் பிரிட்டிஷார்க்குச் சாஸ்வதமாகவா, தற்காலிகமாகவா "எழுதி"க் கொடுக்கப்படும்? என்னும் இன்னோரன்ன பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்ப்பளிக்கும் உரிமை இலங்கைவாழ் பொதுமக்களுக்கேயன்றி "அழுகி", "நாறித்" "துர்க்கந்தம்" வீசும் "பவிசு" கெட்ட அரசாங்க சபைக்கோ, அதன் முதல்வராய மிஸ்ரர் சேனநாயக்காவுக்கோ, பிரிட்டிஷ் தேவதைக்குத் தூபம் போடும் சேர் ஒலிவர் குணதிலகாவுக்கோ இல்லை.

## நேருவின் சமரச மனப்பான்மை

சாஞ்சி அஸ்திகளை இன்னும் கொஞ்சகாலம் இலங்கையில் வைத்திருக்க அனுமதி தரவேண்டுமென்று கோரி இலங்கையிலிருந்து சென்றிருந்த தூதக்கோஷ்டியினரால் டாக்டர் ஏ. ரத்னபாலாவும் திரு. தயாஹோவாவிதானவும் விமான மார்க்கமாக கொழும்புக்குத் திரும்பினர் அஸ்திகளை இலங்கை அரசாங்கம் பத்திரமாகப் பாதுகாப்பார்களேயாகில் அவைகளை இலங்கையில் 1948-ம் வருடக் கடைசிவரை வைத்திருப்பதில் தனக்கு ஆட்சேபமில்லையென்று பண்டித நேரு இலங்கை மகாபோதி சங்கத்தின் தூதக் கோஷ்டியாரிடம் தெரிவித்தார். இலங்கையிலுள்ள சிங்கள பௌத்தர்களின் விருப்பத்திற்கு இந்தியாவின் தலைவர் அனுதாபங்காட்டி அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கினர்.

## கும்பாபிஷேகம்

சரவணையூர் தெங்கங் துளத்தருகிற் கோவில் கொண்டருளிய நாச்சிமார் தேவியின் ஆலயத் திருப்பணி பெரும்பாகம் நிறைவேறிவிட்ட தெனவும், இந்த ஆனி மாதம் 20 ௳ (4-7-47) வெள்ளிக்கிழமை மத்தியானம் நிகழும் சுபமுகூர்த்தத்திற் சம்புரோட்சண கும்பாபிஷேகம் நடைபெறு மெனவும், அச் சமயத்தில், திரு. மு. சுப்பைய தேசிகாவர்கள் தமிழ் மறையோதுவாரெனவும், திரு. வே. கந்தையா அவர்கள் "ஆலய வழிபாடு" என்னும் விஷயமாகப் பிரசங்கஞ் செய்வரெனவும், மேற்படிகோயிற் பராபரிப்புக்காரர் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கேயும் ஜின்னு!

## தமிழ்க் காங்கிரஸ் கூற்று

இலங்கையில் உள்ள தமிழ்மக்கள் மாத்திரம் பூரண ஒற்றுமை கொண்டிருந்தால், எங்கள் ஜனப்பிரதிநிதிகள் தாம் அன்று செய்த வாக்குறுதிப்படி நடந்திருந்தால், எங்கள் தனிப்பெருந் தலைவரான ஜீ. ஜீ க்குப் பூரண ஆதரவளித்திருந்தால், நாங்கள் இன்றைய இலங்கை அரசியல் வாழ்க்கையில், சுதந்தரமான நிலையை அடைந்திருப்போம் இந்தியாவிலே முஸ்லிம்லீக் தலைவரான ஜின்னு எந்தப் பதவியில் இன்று இருக்கிறரோ, அவர் எதனைச் சாதித்து இன்று வெற்றியுடன் விளங்கியிருக்கின்றரோ, அதே பதவியில் எங்கள் தனிப்பெருந் தலைவர் இருக்கவும், நாங்கள் அதே போன்ற வெற்றியுடன் மிளிரவும் முடியும். ஆனல் கோடாரிக்காம்புகள் போன்ற துரோகிகள் எம்மைக் காட்டிக்கொடுத்துவிட்டனர்" என்றிவ்வாறு சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாணம் முற்றவெளியில் நிகழ்ந்த பெரிய ஓர் தமிழ்க் காங்கிரஸ் கூட்டத்தில், பிரபல நியாயவாதியான ஸ்ரீ எஸ். தம்பு துரைசுவாமி அவர்கள் செய்த பிரசாரணத்திற் குறிப்பிட்டார்.

இப்படியான ஓர் அரசியல் சம்பந்தமான கூட்டத்திற்கு முன்னெருபோதும் இவ்வளவு தொகையில ஜனங்கள் சமூகமளிக்கவில்லை எனறவிதமாக யாழ்ப்பாணம் முற்றவெளியில் 1 000 மக்களுக்குமேல் சமூகமளித்தனர். கூட்டம் ஆரம்பமாகுமுன் யாழ்ப்பாணத்தின் நாலாபக்கங்களிலும் இருந்து ஊர்வலங்கள் தலைவர்கள் சகிதம் கூட்ட இடத்துக்கு வந்தன. பிரசாரணங்களைச் சனங்கள் கேட்பதற்காக ஒலிபரப்பிக்கருவிகள் அமைக்கப்பட்டிருந்தன,

கூட்டம் பிற்பகல் 6½ மணிக்கு ஆரம்பமாயது கத்தோலிக்க மேற்றிராசனச் சங்கத் தலைவரான மிஸ்ரர் வி. ஜோசப் அவர்களே கூட்டத்துக்குத் தலைமை வகிப்பாரென விளம்பரங்களில் அறிவிக்கப்பட்டிருந்தும் அவர்சமூகமளிக்கவில்லை எனவே, நியாயதுரந்தரர் மிஸ்ரர் அல்பிரட் சுவாம்பிள்ளை என்பவர் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அவர் தமது சுருக்கமான தலைமைப் பிரசாரணத்தில், தமிழ்மக்கள் சாதிமத பேதமின்றித் தமிழ்க்காங்கிரஸ் கொடிக்கீழ் நின்று தொண்டாற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அடுத்தபடியாகத் திரு. இ. சிவகுருநாதர் அவர்கள் அன்று சொற்பொழிவு ஆற்றவிருப்பவர்களைச் சபையினர்க்கு அறிமுகப்படுத்திஞர் இதன்பின் நியாயவாதி திரு. ஏ. வி குலசிங்கம் பேசியபோது, சிங்களர் தமக்கெனச் சிங்கள மகாசபையையும், முஸ்லீம்கள் முஸ்லிம்லீக் என ஓர் ஸ்தாபனத்தையும் வைத்திருக்கும்போது, தமிழ்மக்களாகிய நாம் ஏன் எமக்கென ஓர் ஸ்தாபனத்தை வைத்திருக்கவொண்ணுதென்று கேட்டார். இன்னும் தமிழ்மகனுகப் பிறந்தஎவனும், "தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா!' என்று மார்புதட்டிக்கொண்டு ஏன் நிற்கக்கூடாது என்று கூறி, சேனநாயக்காவின் வாலில் தொங்கும் அடிமைக் கொள்கையை அடியோடு நீக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இதன்பின்னர் அரசாங்கசபை அங்கத்தவரும் "சுதந்திரன்" பத்திராதிபருமான ஸ்ரீ கோ. நடேசையர், சிங்களத்தலைவர்களான சேனநாயக்காவும் கொத்தலாவலையும், தமிழ்மக்களுக்கு அரசியற்பாடம் படிப்பிக்க முன்வருவதைக் கண்டித்து, "தமிழ்மக்களுக்கு இவர்கள்தானு பாடம் படிப்பிக்கவேண்டு ? தமிழர்களுக்குத்தங்களுக்கு வேண்டிய பிரதிநிதிகளைத் தெரிந்தனுப்ப மூளையில்லையா" என்று கேட்டு இலங்கைத் தேசாதிபதியும், சேனநாயக்காக் கட்சியும் சேர்ந்து, தமிழ் மக்களை அடக்கியாள்வதற்குச் சாதகமான ஓர் அரசியலை நிர்மாணிக்கச் சதியாலோசனை செய்கின்றனர் என்று குறிப்பிட்டார்.

இதன்பின் பிரபலநியாயவாதியான ஸ்ரீ துரைசுவாமி தம்பு பேசியபோது, இவ்விபரக் கட்டுரையின் ஆரம்பத்திற் காட்டியவாறு குறிப்பிட்டு. தமிழ்மக்கள் இனியாவது ஒற்றுமையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

காங்கேசன்துறைப்பகுதிக்கு ஓர் அபே

தொடர்ச்சி 4ம் பக்கம்

## ஐ. தே. கட்சி கூற்று

இந்தச் சின்னஞ்சிறிய இலங்கையில்வந்துப்புவாதப் பைசாசத்தை உருவாக்கி. அதன்மூலமாகத் தானும் ஓர் ஜின்னுவாக மிளிரலாம் என்று ஸ்ரீ ஜீ. ஜீ பொன்னம்பலம் கனவுகண்டார். பாரத நாட்டில் ஜின்னுவுடன் முஸலீம்கள் ஏகோபித்து நின்றதைப்போல, இங்கும் தமிழ்த் தலைவர்கள் ஸ்ரீ பொன்னம்பலத்துக்கு ஆதரவு அளித்திருந்தால், அவரும் ஜின்னுவைப்போல இங்கேயும் எங்களுக்கு எவ்வளவோ கருமங்களைச் செய்திருப்பாரே என்று ஓர் சிலர் எம்மிடையே கூறித் திரிகின்றனர். அரசியலில் அரிச்சுவடிதானும் தெரியாதவர்களும், இந்தியா இலங்கை நிலைமையை உணராதவர்களும்தான் இந்தவிதமான பசப்புமொழிகளைக் கூறுகின்றனர்' என்று யாழ்ப்பாணம் நகரசபைத் தலைவர் திரு. க. பொன்னம்பலம் அவர்கள் சென்ற வெள்ளிக்கிழமை, மந்துவில் சைவவித்தியாசாலை மண்டபத்தில் சாவகச்சேரித் தொகுதிக்கு ஐ. தே. க. சார்பாக அபேட்சகராக முற்பட்டிருக்கும் திரு வீ ஆர் தம்பையாவை ஆதரிக்கும்முகத்தாற்கூடிய ஓர் பெரிய கூட்டத்திற குறிப்பிட்டார்.

இக்கூட்டத்திக்கு மந்துவிலிலிருந்தும் அயற் கிராமங்களிலிருந்தும் பெருந்திரளாகச்சனங்கள் சமூகமளித்தனர். ஐ. தே க. தலைவர்களான ஸ்ரீமான்கள் சு. நடேசன், க. பொன்னம்பலம், சாம. சபாபதி S. R. கனகநாயகம், C. R. தம்பையா, S. கைலாசபிள்ளை என்பவர்கள் ஊர்வலமாக மேளவாத்தியத்துடன் மேற்படிவித்தியாசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கூட்டத்திற்கு மந்துவிற் கிராமச்சங்கத் தலைவர் திரு. S. கைலாசபிள்ளை தலைமைவகித்து, ஐ. தே. க. தலைவர்களைச் சபையினர்க்கு அறிமுகப்படுத்திவிட்டு, தென்மராட்சி மக்களில் ஒருவராய், அந்நாட்டுமக்களுக்குத் தொண்டுசெய்து வருபவராய திரு. C R. தம்பையா அவர்களையே தெரிவுசெய்ய வேண்டுமன்றி மூந்தாநாட்பெய்த மழைக்கு, நேற்று முளைத்த காளான்போன்ற அரசியற் குழந்தைகளை—அனுப்பு வித்தைக்காரரை அனுப்பக்கூடாது என்று கேட்டுக்கொண்டார் இன்னும் 'தமிழருக்கு ஆபத்து", "தமிழர்க்கிடையே ஒற்றுமை வேண்டும்" என்றும் கூறிவரும் தமிழ்க்காங்கிரஸ வாதிகள் தமிழர்க்கிடையே வேற்றுமையைப் புகுத்த எத்தனிப்பதையும் அவர் கண்டித்தார்.

அடுத்ததாக ஸ்ரீ சாம் சபாபதிபேசிஞர் வடமாகாணத்தின பொருளாதாரநிலைமை என்ன? வடமாகாணத்து மக்கள் தனித்தியங்க முடியுமா? எங்கள் பொருளாதார நிலைமை திருந்தவேண்டுமானல், பெரும்பான்மை மக்களின் ஒத்துழைப்பு வேண்டும். அந்த ஒத்துழைப்பைப் பகைத்துப் பெறமுடியாது. இந்த யாழ்ப்பாணத்தின் செல்வ நிலைக்குக் காரணமாகிய சுருட்டுத் தொழிலை எடுத்துக்கொள்வோம். இத் தொழிலினல் 20000 பேர்வரை இங்கே சீவியம் நடத்துகிறர்கள். எங்கள் சுருட்டுத் தென் இலங்கையில் வியாபாரமாகி எமக்குப் பொருள் வருகிறது. சிங்களமக்களை நாங்கள் பகைத்தால், அவர்களும் எதிர் நடைவடிக்கை எடுத்தால், இத்தொழிலின் கதி என்னுகும்? என்று சாம் சபாபதி குறிப்பிட்டார்.

அடுத்தபடியாகப்பேசிய யாழ்ப்பாணம் நகரசபைத் தலைவர் திரு. க பொன்னம்பலம், தமிழ்க் காங்கிரஸ்வாதிகள் செய்துவரும் "சின்னத்தனமான" பிரசாரங்களைக் கண்டித்துவிட்டு, இந்த விபர அறிக்கையில் முதற்பகுதியிற் கூறியவாறு குறிப்பிட்டுப் பின்வருமாறு கூறிஞர்: "இந்தியாவிற் 0 கோடி முஸல்மான்கள் உள; அவர்கள் தனியாக நிர்வகிக்கக்கூடிய பரந்த இராச்சியம் உண்டு எங்களுக்கும் இங்கே அப்படியுண்டா? மாங்குளத்துக்கப்பால், நாம் சுயராஜய நாடாக இருக்கத்தானும் எமக்குப் பொருள் வருவாயுண்டா? இப்படியெல்லாம் கூறும் அரசியற் குழந்தைகளின் அஞ்ஞானத்தை என்னென்று கூறுவது?என்றுர். தமிழ்க் காங்கிரஸ்மற்றும்சமூகத்தாருடனும் ஒத்துழைக்கப்போவதாகச்சொல்வதைக்கண்டித்து, திரு பொன்னம்பலம் பின்வருமாறு கூறிஞர்:

"தமிழ்க் காங்கிரஸ் ... ஒத்துழைக்கப்போகிறதாம் இது பாராட்டக்கூடிய ஓர் விஷயம்தான். ஆனல் ஒத்துழைப்பு என்பது ஒரு பகுதியார்க்கு மேற்பட்டவர்களிடையேதான் ஏற்பட வேண்டும். ஒரு கட்சி ஒத்துழைப்பைக் கொடுத்தால், அதனை ஏற்க இன்னேர்கட்சியும் வேண்டும் தமிழ்க்காங்கிரசின் ஒத்துழைப்பைப் பெற இலங்கையில் எந்த அரசியற்கட்சி தயாராக விருக்கிறது என்பதை ஜீ ஜீ ஏன் பகிரங்கமாகக் கூற மறுக்கிறர்! கரையூர்த்திட்ட விஷயமாக நான் முன்னர் திரு. ஜீ ஜீக்கு ஓர் பகிரங்கச் சவால் விடுத்தேன்: அதற்கு நாளிதுவரை பதில் இல்லை. இப்போது இன்னேர் சவால் விடுக்கிறேன். திரு. ஜீ ஜீ உண்மையான ஓர் இராஜதந்திரியானல, அரசியல்வாதியானல், எங்களை ஏமாற்றக் கங்கணம் கட்டியிராவிட்டால், அவரும் அவருடைய காங்கிரஸ் பிள்ளைகளும் யாருடன் ஒத்துழைக்கப்போகிறர்கள என்பதைப் பட்டவர்த்தனமாகத் தெரிவிக்க வேண்டும். அல்லது, மற்றவர்கள் ஒத்துழைப்பில்லாமலேயே தாம் அரசியற் பரி

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## திரு. அந்தோனிப்பிள்ளை

### ஒரு வருஷச் சிறைத்தண்டனை

இலங்கை வாசியும், சென்னை ஆலைத் தொழிலாளர் சங்கத் தலைவருமான மிஸ்ரர் S. C. C அந்தோனிப்பிள்ளை சென்ற சனிக்கிழமை சென்னை நீதிபதியால் ஒரு வருட வெறுங்காவற் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்.

சென்னை அரசாங்கம் விதித்திருந்த தடை உத்தரவை மீறிச் சென்னை மாகாணத்திற் பிரவேசித்து, ஓர் தொழிலாளர் கூட்டத்திற் பேசினர் என்பதே மிஸ்ரர் அந்தோனிப்பிள்ளை மீதிருந்த குற்றச்சாட்டு.

நீதிபதி எதிரியைக் குற்றவாளி எனக் கண்டு, அவர்க்கு மேலே கூறியவாறு தண்டனை விதித்தார். ஆனல் அவரைவிசேஷ வகுப்புச் சிறையாளராக வைத்து நடத்தும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

இத்தீர்ப்புக் கெதிராக, மிஸ்ரர் அந்தோனிப்பிள்ளை, சென்னை உயர்தர நீதி மன்றத்துக்கு மநுச்செய்ய ஏற்பாடுகள் செய்துவிட்டார்.

## கதிர்காமப் பாதை

திசமாராவிலிருந்து கதிர்காமம் செல்லும் தெருவையும் கதிர்காமத்திலிருந்து செல்லக்கதிர்காமத்திற்கும் ககிரைமலைக்கும் செல்லும் ஒற்றடிப் பாதைகளையும் செப்பனிடவேண்டு மென்று அரசாங்க சபையில் திரு ராஜகுலேந்திரன் கொண்டுவந்த தீர்மானத்தின் மீது சிழ்க்கண்ட குறிப்பு காணப்படுகிறது: அடுத்த ஆடி விழாவுக்குள் பாதையைச் செப்பனிட முயற்சி நடைபெறும் ஒற்றடிப் பாதைகள் போக்குவரத்துப் பகுதியின் ஆங்கத்திலில்லை. கூடிய விரைவில் அப்பாதைகள் பகிரங்கவேலைப்பகுதியுடன் சேர்க்கப்படும்

### கதிர்காம உற்சவம்

கதிர்காம ஆடிவேல் உற்சவம் யூலை மீ 7ந் திகதி ஆரம்பமாகி ஆகஸ்ட் 2ந் தேதியுடன் முடிவடைகிறது

## யாழ்ப்பாணம் கடலேரித் திட்டம்

நீண்டகாலமாக விவாதிக்கப்பட்டுவந்த யாழ்ப்பாண கடலேரித் திட்ட வேலையை நீர்ப்பாசனப்பகுதி இந்தமாதத்தில் ஆரம்பித்துவிடுமென்று இப்பொழுது நிச்சயமாக அறியப்படுகிறது. வடமராட்சி கடலேரியை சுத்தஜல ஏரியாக்குவதற்குத் தொண்டைமானுறில் ஒரு பெரிய அணை கட்ட பத்துலட்சம் ரூபா அனுமதிக்கப்பட்டிருக்கிறது இதன்மூலம் 15000 ஏக்கர் நிலத்தைச் சாகுபடிக்குக் கொண்டுவரலாம் இதில் 8000 ஏக்கர் நிலத்தில் நெற்சாகுபடியும். மற்றவைகளில் வெங்காயம், மிளகாய், புகையிலை முதலியவைகளும் பயிர் செய்யக்கூடும். விவசாயிகளுக்கு இந்தத் திட்டத்தினுல் ஒவ்வொரு வருடமும் 30 லட்சம் ரூபா வருமானம் கிடைக்க முடியுமென்று மதிப்பிடப்படுகின்றது.

## கொழும்பு தமிழ்ச் சங்க காட்சிவிழா

சென்ற வெள்ளிக்கிழமை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தாரால் ஏற்பாடு செய்யப்பட்ட காட்சிவிழா கின்ரோஸ் அவன்யூவில் ஆரம்பமாயிற்று.

கொளும்பு மேயர் வர இயலாதிருந்ததால், திரு. கே. எஸ். அருள்நந்தி காட்சிவிழாவைத் திறந்து வைத்தார். திரு. அருள்நந்திக்கு போடப்பட்ட மாலை ஏலத்தில் விடப்பட்டபோது, ஸ்ரீமதி அமிர்தலிங்கம் அதை 30 ரூபாய்க்கு வாங்கினர். அது மீண்டும் ஏலத்திற்கு விடப்பட்டபோது அவரதுகணவன் திரு. அமிர்தலிங்கம் அதை 50 ரூபா விலைக்கு வாங்கினர், ஏராளமான ஜனங்கள் காட்சிவிழாவைக் கண்டுகளிக்க வந்திருந்தார்கள். நடனங்கள், சங்கீதங்கள் களியாட்டங்கள் முதலியவை நடைபெற்றன. நள்ளிரவுவரை இதற்காக பஸ்கள் ஓடிக்கொண்டிருந்தன.




உ

குகமயம்

முல்லைத்தீவு, குமாரபுரம்

ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமிகோவில்

திருப்பணி விஞ்ஞாபனம்

இச் சுப்பிரமணியதலத்தின் தொன்மை, மகிமை என்னும் இவைகளைப் பற்றிச் சைவ மக்கள் பலர் அறிவர். சைவ பிமானிகள் காலந்தோறும் உதவிவரும் தருமப்பொருளைக் கொண்டே இத் திருக்கோவிலின் திருப்பணி நிறைவேறி வருகின்றது.

இப்பொழுதும் இத்திருக்கோவிலிலுள்ள விநாயகர் ஆலயத்தின் எஞ்சிய திருப்பணி திருமஞ்சனக் கிணறு ஸ்தம்பமண்டபம், மகாமண்டபத்தின் கிழக்கு தெற்கு வாசல்களுக்கு கதவுகள் போடுதல், இரண்டு மண்டபங்களுக்கும் நிலத்திற்கு சீமன் கொங்கிறிற் போடுதல், வாகனசாலை களஞ்சியம் சுற்றுமதில் என்னும் இவைகளைச் செய்து நிறைவேற்றவேண்டியிருப்பதால் தங்கள் தங்களாலியன்ற பொருள் உதவி, மேற்படி திருப்பணிகளை நிறைவேற்றிவைக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகிறன.

"போர்பொரு தருந்துணை புரிந்த புண்ணியர்"

இங்ஙனம்,

குமாரபுரத் திருப்பணித் தொண்டன்,

கு. பரமசாமிக் குருக்கள்.

M's 74 1, 4, 8—7—47.


## இந்தியாவின் தேசியக் கொடி

இந்தியாவின்கொடி இப்பொழுதுகாங்கிரஸ் அநுஷ்டித்து வரும் மூவர்ணக் கொடியேயாகும் இந்திய அரசாங்கத்துக்கு அதிகாரம்மாறியவுடன், இந்தியாவெங்கும் அரசாங்கக் கட்டிடங்களில் ஒரு குறிப்பிட்ட தினத்தில் அதனைப்பறக்கவிட ஏற்பாடுசெய்யப்படும். கொடியேற்று வைபவம் வெகு சிறப்பாகக் கொடி வணக்கத்துடன் ஆரம்பமாகும்,

காங்கிரஸ் காரியசபையும்அக்கொடியில் இனி எதாவது மாறுதல் செய்யவேண்டுமாவென்றும் யோசித்துவருகிறது. அதன் முடிவும் சீக்கிரத்தில் ஏற்பட்டுவிடுமெனத் தெரிகிறது 30 வருஷ காலமாக மூவர்ணக் கொடியே வழங்கிவருகிறது அதன் கீழ் அநேக சுதந்திரப் போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. அநேகமாக அக்கொடியேதான் தேசக் கொடியாக வழங்கலாமெனச் சொல்லப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.தே. கட்சி கூற்று

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பாலனம் நடத்தலாம் என்று ஜீ. ஜீ மனக்கோட்டை கட்டுகிருரா? எதுவாயினும் சரி, அதனைப் பகிரங்கத்திற் கூறுவராக."

திரு. நடேசன் பேசுகையில் உலக அரசியல் நிலைமையைக் குறிப்பிட்டு தமிழ்க் காங்கிரஸ் தலைவராகிய திரு பொன்னம்பலத்தின் நிலைமை, ஹிட்லர் முசோலினி முதலிய சர்வாதிகாரிகளின் நிலையைில்தான் இருக்கிறதெனக் கூறினர். "தமிழன் என்று சொல்லடா! தலைநிமிர்ந்து நில்லடா" என்றற்ருெடக்கமான நாமக்கல் கவிஞர் ராமலிங்கம்பிள்ளையின் வீரக்கவியைப் பாரதியார் கவி என்று திரித்துக் கூறும் இவர்கள்தான தமிழர் என்றுகேட்டார். அதுவுமன்றி 'தமிழ்க்காங்கிரசிற் சேராதவர்கள் தமிழரல்ல என்றும் துர்ப் பிரசாரம் செய்து வருகிருர்கள். தமிழ்க் கலையின் மணம்தானும வீசப்பெருத இவர்கள், தம்முடன் சேராத மற்றவர்களைத் துரோகிகள் என்று கூறுதல் எவ்வளவு அகம்பாவம் நாம் தமிழன் என்று சொல்லுவோம்! தலைநிமிர்ந்து நிற்போம். அவ்வளவுடன் எம் கடமை தீரவில்லை. இந்த நாட்டின் அரசியற் பரிபாலனத்திலும் பங்குபற்றித் தமிழராகிய எங்கள் சுயமரியாதையையும் காப்பாற்றுவோம். திரு. ஜீ ஜீ. பொன்னம்பலம் அரசாங்க சபையில ஓர் சிங்களப் பிரதிநிதியுடன் அன்ருெருநாள் அரசாங்கசபைக் குள்ளேயே குஸ்திச் சண்டை செய்து புரட்டப்பட்டார். இப்படியான வேலைகளுக்கு நாங்கள் போகமாட்டோம். எங்கள்சாதுர்யத்தால், அரசியல் ஞானத்தால், எங்கள் வன்மையால், எங்கள் உரிமைகளைப் பெற்று "தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா" என்போம் என்று கூறிமுடித்தார்.

திரு. வி. ஆர். தம்பையா அவர்கள் அடுத்தபடியாகப் பேசினர்.

கூட்டத்துக்கிடையில், தமிழ்க் காங்கிரசைச்சேர்ந்த ஓர்சிலர் குழப்பம் விளைக்க முயற்சித்தனர். அது வாய்க்கவில்லை. கூட்டம் 10 மணியளவில் இனிதே முடிந்தது.


## பசந்த லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருரூத்தல் விலை ரூபா 25
அரைரூத்தலுக்கு ரூபா 12-50
கால்ரூத்தல ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**

இ. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to , 1—4.-48

## ஆங்கிலம்

மூன்று மாசத்தில் ஆங்கிலம் எழுதப் பேசப் பயிற்றிவிடலாம்; ஓய்வுள்ள நேரத்தில் நீரே வீட்டில் படித்துக் கொள்ளலாம். தபால் மூலமாகவே நாங்கள் பயிற்றி வருகிருேம்; மாசவேதனம் ருபா 2-50

அற்லஸ் ஹால்
தபாற் பெட்டி இல. 649
கொழும்பு

Postal School
P. O. Box 649
Colombo.

Std 19 27-5 — 26-8-47

## செந்தமிழ்ப் பயிற்சிமாலை

ஐந்தாம் ஆறும் வகுப்புகளில் பாஷைப் பாடத்துக்கு மிக அனுகூலமான பல பயிற்சிகளைக் கொண்டது. விடைகளையும் புத்தகத்திலேயே எழுதக்கூடிய விதமாக அமைந்துள்ளது.

[விலை ருபா 1– 35]

ஆசிரியர்:

**ஸ்ரீமதி. க. சௌ. சந்தன நங்கை யவர்கள்**

பதிப்பாளர்:

எஸ். எஸ். சண்முகநாதன் & சன்ஸ்
யாழ்ப்பாணம்,

Mis 70 27-647—1-7-47.

## யூனியன்
## களியாட்டமும் பொருட் காட்சியும்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிற் றிருவிழா நாட்களில் (ஆகஸ்டு 7—16, 1947) நடைபெறும்

யாழ்ப்பாணத்தின் மூலைமுடுக்குகளிலுமுள்ள

பெரியவர்—சிறியவர்—வறியவர்—செல்வர்

எல்லாரையும் காணலாம்

கடையொன்றை எடுத்து உங்களை விளம்பரப்படுத்துங்கள்

அதனேடு அரிய பொருள்களையும் விலைப்படுத்திப் பெரும் பணம் ஈட்டுங்கள்

நற்பயன் கொடுக்கும் இந்தத் தருணத்தைக் கைவிடாதீர்கள்

விபரங்களுக்கு உடனே எழுதுங்கள்;

**காரியாதிகாரி**

யூனியன் களியாட்டமும், பொருட் காட்சியும்,
யூனியன் கல்லூரி :: தெல்லிப்பழை

25-6-41 (M. 72. 1-7-47)

## கந்தசாமி வைத்தியர்
## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற் புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பணிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற் களஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்:

**கால் ருத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பி யில் அனுப்புவோம்.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை

Std 25 1-7-47—30-6-48 (செ)

## நாகப்பட்டணம் மார்க்கம்
## சிங்கப்பூர், பினுங்
## கப்பல்
## புறப்படுந் தேதி

கொஸ்ரே — 18-6-1947
ருஜாலா — 2-7-1947
கொஸ்ரே — 16-7-1947
ருஜாலா — 30-7-1947

தற்கால நெருக்கடியைச் சமாளிப்பதற்கு ஏற்ற வசதிகள் செய்வதற்குத் தகுந்த அவகாசமளிக்கும்நோக்கத்துடன் எம்மிடம் பிரயாணச் சீட்டுப் பெற விருப்புவோர் உங்கள்

**பெயரைத் தாமதமின்றிப் பதிவு செய்துகொள்ளுங்கள்**

**எஸ். ஆர். எஸ். நாதன்**

15. சிவப்பிரகாசம் ரோட்,
ஐயனர்கோவிலடி :: வண்ணார்பண்ணை

Std 23. 6-6-47—6-6-48


## தமிழ்க் காங்கிரஸ் கூற்று

3-ம் பக்கத் தொடர்ச்சி

ட்சகராக முற்பட்டிருக்கும் திரு. எஸ். ஜே. வீ. செல்வநாயகம், தம் பிரசாரணத்தின்போது சிங்களராஜ்யத்திலே, தமிழ்ப் பாஷைக்கு நேரிடவிருக்கும் ஆபத்தைக் குறிப்பிட்டுப பின் வருமாறு கூறினர்:

"சிங்களத் தலைவர்கள் எங்கள் கலையை, ஆசாரானுட்டானங்களை எங்கள் சாதியைச் சிதைக்கக் கங்கணம் கட்டியிருக்கிருர்கள், அதனைத் தடுக்கவேண்டுமேயானுல், நாம் எல்லாரும் ஒற்றுமைப்பட்டு வாழவேண்டும். நாங்கள் சிங்களருடன் ஒத்துழைக்கத்தான் போகிறேம்; ஆனல் செனனாயகாக் கட்சியுடன் ஒத்துழைப்பதென்பது முடியாத காரியம். யதேச்சாதிகாரத் தர்பார் செலுத்தக் கங்கணம் கட்டிநிற்கும் அதிகாரவெறிபிடித்த அவருடன் நாம் எப்படி ஒத்துழைக்க முடியும்? சிங்களர் நல்லவர்கள்; ஆனல் அவர்களின் தலைவர்கள் அவர்களைப் பிழையான வழிகளிற் செலுத்தி வருகிருர்கள். செனனுயக்காவும் அவர் கட்சியினரும் தான் அடுத்த பாராளுமன்றத்தில் அதிக ஸ்தானங்களைக் கைப்பற்றி அதிகாரத்துக்கு வருவர் என்பது ஓர் சிலரின் பகற்கனவு".

அடுத்ததாகத் திரு. ஜீ. ஜீ பொன்னம்பலம் பேசினர், பருத்தித்துறைத் தொகுதிக்கு முன்போல அபேட்சகராக நிற்காமல் யாழ்ப்பாணத் தொகுதிக்குத் தான் முற்பட்டதற்குக் காரணம் இன்னதென்பதை விளக்கி அவர் பின்வருமாறு பேசினர்:

"யாழ்ப்பாணத்தொகுதிக்கு ஸ்ரீ செல்வநாயகம் ... என்று முன் ... ஆனல் காங்கேசன்துறையில் 'நடேசனை யடக்க'த் தகுதியான ஆட்கள் இல்லாமையினுல் திரு. செல்வநாயகத்தை அங்கே நிறுத்தக் காங்கிரஸ் அதிகாரபீடம் தீர்மானித்தது. ஸ்ரீ செல்வநாயகத்துக்குப்பதிலாக என்னை இங்கே நிற்கும்படி காங்கிரஸ் அதிகாரபீடம் கட்டளையிட்டபடியினுல் தான் நான் இங்கே முற்பட்டு நிற்கிறேன்:

"1934ம், 1936ம் ஆண்டுகளில் திரு மகாதேவா. இத்தொகுதித் தேர்தலில் முற்பட்டு நின்றபோது, 'ஐம்பதுக் கைம்பதுக்' கொள்கையைத் தாம் பின்பற்றுவதாகக் கூறிச் சென்ருர். ஆனல் தேர்தலில் வெற்றிபெற்று அங்கே சென்றதும் ஓர் குட்டிக்கரணம் போட்டு அதிகார மோகம்கொண்டு, ஆளும் கட்சியுடன் சேர்ந்தார்"

கரையூர்த்திட்டம் சம்பந்தமாக திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் பேசியபோது பழைய சட்ட நிருபணசபையில், கரையூர் கடல் மேவிய பூமிக்குத் தெருக்களும் கான்களும் அமைக்க 35,000 ரூபா மான்யப் பிரேரணை வந்தபோது, ஸ்ரீ மகாதேவாவும், மிஸ்ரர் செனனுயக்காவும் சேர்ந்து, அதனை எதிர்த்ததை எடுத்துக் காட்டினர். உடனே சபையில் இருந்த ஒருவர் உரத்த சத்தத்தில் 'நீர் இவ்வளவு எல்லாம் சொல்லுகிறீர், ஆனல் நகரசபைத்தலைவர் கரையூர்த் திட்டம் விஷயமாக உமக்கு ஓர் பகிரங்க சவால் விடுத்தார்; அதனை நாளிதுவரை என் ஏற்றுக்கொள்ளவில்லை? அதற்குப் பதில் என் கொடுக்கவில்லை' என்று கேட்டார். உடனே கூட்டத்திற் குழப்பம் ஏற்பட்டது. 10 நிமிஷ நேரமெல்லாம் சிறிது குழப்பம் ஏற்பட, பொலிசார் பிரவேசித்து கேள்விகள் கேட்ட திரு. எஸ் சோமசுந்தரம் என்பவரைப் பிடித்துக்கொண்டு அப்பாற் சென்றனர். இதன்பின் கூட்டம் ஒருவாறு பின்னரும் நிகழ்ந்தது. திரு, ஜீ. ஜீ. பொன்னம்பலம் தொடர்ந்து பேசுகையில் இப்போது இலங்கைக்கு வழங்கப்படவிருக்கும் டொமினியன் அந்தஸதைப் பற்றிக் குறிப்பிட்டார்.

இதன்பின் திருவாளர்கள் வி. எஸ். கார்த்திகேசு, ரீ. ராமலிங்கம், எஸ் சிவபாலன், எஸ். சரவணமுத்து, வி. கார்த்திகேசு, முதலியோரும் பேசியபின் கூட்டம் 11 மணியளவில் முடிந்தது,


## காணி விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை கிழக்கு கருணுகரர் அப்புத்துரை கைம்பெண் மாரிமுத்துப்பிள்ளையாகிய நான் எனது பராயமற்ற பிள்ளைகளாகிய 1 கருணுகரர் 2 கதிர்காமராசா 3 வயித்திலிங்கம என்பவர்கட்கு அவர்களின் காலஞ்சென்ற பிதாவிலிருந்து முதுசொமாய் வந்தடைந்ததும் இதன்பின்னுல் நன்கு விபரிக்கப்படுவதுமான காணியை யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் 230 ம் இலக்க பராபரிப்புத் தத்துவ வழக்கில் விற்பதற்காக 1946-ம் ஆண்டு வைகாசி மாதம் 30 ந் திகதி குறித்தகோட்டின் நீதிபதி அவர்களிடம் உத்தரவு பெற்றிருப்பதால், இன்று தொடக்கம் 21 நாட்களுக்குள் அதி உயர்ந்த கேள்விக்காரருக்கே கொடுக்கப்படும். ஆகையால் குறித்த காணியை வாங்க விரும்புபவர்கள் தங்கள் கேள்விகளை 1947-ம் ஆண்டு ஆடி மாசம் 22-ந் திகதிக்கு முன் எனது பிறக்ரர் A. குமாரசுவாமி வட்டுக்கோட்டை கிழக்கு Sitbankerni Vaddukoddai அல்லது யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட் சக்கிடுத்தார் (T Sivasubramaniam, Secretary D. C. Jaffna). ஆகிய இவர்களில் எவருக்காகுதல் அனுப்புதல் வேண்டும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி மயிலிட்டிக் கோயிற்பற்று தைபிட்டி இறை கவடு கால் நிலை பர $43\frac{1}{2}$ பும் அதற்குட்பட்ட வைகளும், எல்லை கிழக்கு மயிலிட்டி ஊர் எல்லை. வடக்கு வேலாயுதர் வயிரவநாதரும் மறுவும், மேற்கும் தெற்கும் வறுத்தலைவிழான் ஊர் எல்லை இதில் சொரியலாய் அரைவாசி.

குறிப்பு: மேலே காட்டப்பட்ட காணியைப்பற்றி வேறு விபரங்கள் அறிய விரும்பினுல் அவைகளை எனது புறக்றர் A. குமாரசுவாமியிடம் வட்டுக்கோட்டையில் அவரது இல்லத்தில் அவரிடம் அறிந்து கொள்ளலாம்.

இங்ஙனம்
ஒப்பம் மாரிமுத்துப்பிள்ளை

Mis 73 1—4,-7-47


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவிளையாட்டுப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க் கேட்டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளிபிடப்பட்டுள்ளன.

தாயென வாரல் போந்து தனங்கோள்பா லருத்தலாலே
ஏயதோர் கார்த்திகேய னென்றொரு தொல்பேர் பெற்றான்
சேயவன் வடிவமாறுந் திரட்டிநீ யொன்றாய்ச் செய்தாய்
ஆயத ஞலேகந்த ஞமெனு நாமம் பெற்றான்.

கார்த்திகை நட்சத்திரங்களாகிய பெண்கள் தாய்மார்போல் வந்து தத்தம் தனங்களிற் சுரந்த பாலை யூட்டியமையினாலே பொருத்தமுடைய தாகிய கார்த்திகேயன் என்னும் ஒரு சிறந்த பெயரைப் பெற்றான். நீ அக்குமரனுடைய ஆறு வடிவங்களையும் (உன் கரங்கள் கொண்டு) ஒன்றெனச் சேர்த்தமையினாற் கந்தன் என்னும் பெயரைப்பெற்றான் என்பது கருத்து.

நற்றாயன்றிச் செவிலித் தாயராதலால் தாய் என்னாது தாயென என்றார்; கார்த்திகேயனென்ற திருநாமங் குமரவேளுக்கு எக்காலத்துமுள்ளதாதலின் "தொல்பேர்" என்றார். கந்தன் - சேர்க்கப்பட்டவன்;

[கந்தனென்பதற்குப் பிறிதோர் காரணமுமுண்டு; அஃது எதிர்த்த வீரர்களது பகை முனையையுடைப்பவனென்பதாம்.] (17)

நன்முக மிருமூன் றுண்டா னமக்கவை தாமேகந்தன்
றன்முக மாகி யுற்ற தாரகப் பிரமமாகி
முன்மொழி கின்றநந்த மூவிரண் டெழுத்து மொன்றாய்
உன்மக ஞமத்தோரா றெழுத்தென வுற்ற வன்றே

எமக்கு நல்ல திருமுகங்கள் ஆறுண்டல்லவா, அவையே கந்தன்முகங்களாகியுமுற்றன; பிரணவம் முதலிற் சேர்ந்து உச்சரிக்கப்படுகின்ற எமது (பஞ்சாக்கர மந்திரத்தின்) ஆறெழுத்துக்களும் ஒருங்குசேர்ந்து உன் குமரன் நாமத்தில் ஆறெழுத்துக்களா யமைந்தனவென்பது கருத்து.

"நன்முக மிருமூ ன்றுண்டால் நமக்கு" என இறைவனுக்கு ஆறு திருமுகங்களுண்டென்பது "அந்திக்கு நிகர்மெய்யண்ண லருள்புரிந் தறிஞராயோர்—சந்திக்குந் தனது தொல்லைத் திருமுகமாறுங் கொண்டான்" எனத் திருவவதாரபடலத்தில்வந்துள்ள(43-ம்) திருவிருத்தத்தில் விளக்கப்பட்டுளது. ".......தாரகப் பிரமமாகி, முனமொழிகின்ற நந்த மூவிரண்டெழுத்து மொன்று, யுன்மக ஞமத்தோரா றெழுத்தென வுற்றவன்றே" என்பதனை "ஆறுமாமுகஞ்சேர்த்துள்ள நமக்கவை யவன்முகங்கள் — ஆறுமாயிருந்த வேதமறையுந் தாரகவெழுத்தோ — ராறுமாங்கவ ஞமத்தா றெழுத்துமாயிருக்தவன்றே" எனத் தணிகைப் புராணத்தில் வருவதானுமுணர்க.

[ஒன்று ஐந்து, ஆறு, எட்டு என்னுமிவ் வக்கரங்களாலாகிய மந்திரமும் பஞ்சாக்கரமென வழங்கப்படுமென்க; இதற்குப் பிரமாணம் "ஒருகோட்டன் இருசெவியன்......." என்னுஞ் சித்தியார்க் காப்புச் செய்யுளுக்குச் சிவஞான முனிவர் எழுதிய வசனத்தில் விரிவாய்க் காண்க.] (18)

ஆதலி னமதுசத்தி யறுமுக னவனும் யாமும்
பேதகமன்று நம்போற் பிரிவிலன் யாண்டு நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்
போதமு மழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்.

மேலே சொல்லப்பட்ட காரணங்களினால் சண்முகன் நமது சத்தியாவன்; அவனும் நாமும் வேற்றுமையுடையேமல்லேம்; எம்மைப்போல் அவனும ஒழிதலின்றி எங்குமுள்ளான்; விரகறியாக் குழந்தைபோற் காணப்படினும் எல்லாமுணர்ந்தவனுவன், தம்மை வழிபடுவோர்க்குச் சகல சிறப்புக்களையும் ஞானத்தையும் அழிதலில்லா (நிலையான) வீட்டின்பத்தையும் உதவும் அதிகாரத்தை யுடையவனுவன் என்பது கருத்து.

16-ம் திருவிருத்தந் தொடக்கம் இத்திருவிருத்தங்காறும் கைலாசபதி குமரவேளின் காரணத் திருநாமங்களையும் தமக்கும் சண்முகத் தெய்வத்திற்கும் எவ்வகையான பேதமுமில்லை யென்பதையும் உலகோர் அறிந்து ஈடேறற்பொருட்டுத் தேவிக்கு எடுத்துரைத் தருளியவாறும்.

[சீரும்-புத்தியும், போதம் - ஞானப்; அழிவில் வீடு-பரமுத்தி; சத்தியென்பதனை அண்மைவிளியாக்கி உமாதேவியென வுரைத்தலுமொன்று] 19

# அமெரிக்கர் பிரலாபம்

## ராணுவம் இரண்டாந்தரமானது

அமெரிக்காவின் ராணுவத்தை இன்னும் அதிகமாகப் பலப்படுத்த வேண்டுமென்று, ஐரோப்பாவில் ஹிட்லரின் படைகளை முடியடித்தநேசதேசப்படைத் தளகர்த்தரான ஐஸன்ஹோவர் ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார். 1948 ம் ஆண்டிலே யுத்தம் நிகழாது என்ற எண்ணத்தின் பேரிலேயே, அமெரிக்கா தன் வரவு செலவுத் திட்டத்தைத் தயார் செய்து, ராணுவத்துக்குரிய செலவை மிகவும் குறைத்தது யுத்தம் நிகழாமல் இருக்கலாம்; ஆனால் அதற்கு உத்தரவாதம் ஒன்றும் இல்லையே என்று தளகர்த்தர் ஐஸன்ஹோவர் கேட்கிறார்.

பத்திரிகைக்காரர் மகாநாடு ஒன்றில் தளகர்த்தர் ஐஸன்ஹோவர் தமது கூற்றை விபரித்துப் பின்வருமாறு கூறினர்:

"உலகிலேயுள்ள இராணுவ நிலைமையினை அவதானிக்கும்போது அமெரிக்காவின் ராணுவ நிலைமை அவ்வளவு திருப்திகரமானதாகவில்லை இந்தியாவுக்கு அடுத்தபடியிலேயே அமெரிக்கா இராணுவ பலத்தில் இருக்கிறது. எங்கள் இராணுவம் எல்லாம் ஒரே இடத்தில் இல்லை. இங்கும் அங்குமாக உலகின் நாலாபக்கங்களிலும் சிதறுண்டு இருக்கிறது. அது மாத்திரமன்றி, இப்போதைய அமெரிக்க ராணுவத்தில், ராணுவப்பயிற்சி யில்லாதவர்களே அதிகமாக இருக்கின்றனர்

# போஸிடமிருந்த பெருந் திரவியம்

யுத்தகாலத்தில் அமைக்கப்பட்ட இந்திய சுதந்திர அரசாங்கத் தலைவரான சுபாஷ் சந்திரபோஸிடம் ஏராளமான நிதியிருந்ததாகவும் விலைமதிப்பற்ற வைரங்களும் தங்கமும் இருந்ததாகவும் சுபாஷ் சந்திரபோஸ் *1945*-ம் ஆண்டில் போர்மோஸாவில் விமான விபத்தில் அகப்பட்டபோது அவை ஜப்பானிலோ அல்லது போர்மோஸாவிலோ மறைக்கப்பட்டிருக்கக்கூடுமென்றும் ஜப்பானிய பத்திரிகை "மினிச்சி" கூறுகின்றது போஸ் பிரயாணம் செய்து விபத்துள்ளான விமானத்தில் பிரயாணம் செய்த ஜப்பானிய விமானப்படை "சார்ஜண்ட் மேஜர்" இதுபற்றித் தெரிவிக்கையில். சுபாஷ் போஸ் இரண்டு தோற்பைகள் தம்முடன் வைத்திருந்தா ரென்றும் அவற்றில்வைரங்களும் தங்கமும் மற்றும் ஆபரணங்களும் இருந்தனவென்றும் விமானம் விபத்துள் அகப்பட்டபோது அப்பொருள்கள் ஜப்பானிலோ அல்லது போர்மோஸாவிலோ மறைக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும் கூறியுள்ளதாக அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கிறது.

# செய்தித் திரட்டு

சிந்து மாகாணத்தில் உள்ள கராச்சியில் *40,000* தொழிலாளர்கள் வேலை நிறுத்தஞ் செய்துவருகின்றனர் *14* நாட்கள் முன்னறிவிப்பு இல்லாமல் வேலை நிறுத்தஞ் செய்யலாகா தென்று சிந்து சட்டசபை ஓர் தீர்மானம் நிறைவேற்றியதே இவ் வேலை நிறுத்தத்துக்குக் காரணம்.

0 0 0

இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்யும் பண்டிதர் நேருவின் விசேஷ பிரதிநிதியான ஸ்ரீ ஜுத் வி. கே. கிருஷ்ண மேனன், பிரிட்டிஷ் பாராளுமன்றத்தல் இந்திய சுயராச்சிய மசோதா நிறைவேற்றப்படும் சமயத்தில் லண்டனுக்குச் செல்வார்.

0 0 0

அமெரிக்க ஜனப்பிரதிநிதி சபைத் தலைவர் மிஸ்டர் ஜோஸப் மார்ட்டின்தான் அடுத்த அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படலாம் என்று ஓர்செய்தி கூறுகிறது.

0 0 0

பாகிஸ்தான் புதிய அரசாங்கம் நிறுவப்பட்டதும், தங்கள் சொந்த முத்திரைகளை அச்சடித்துக்கொள்ள முஸ்லிம்லீக் அதிகாரபீடம் தீர்மானித்திருக்கிறது

0 0 0

*51* மோட்டர் ரதங்கள் சென்ற திங்கட்கிழமை கொழும்புத் துறைமுகத்தில் இறக்குமதியாயிருக்கின்றன.

# விவாகப் பதிவாளர்

வண்ணார்பண்ணை திரு சி. த. மு. சிதம்பரநாதச்செட்டியா ரவர்களின் சிரேட்ட புதல்வராகிய திரு. பசுபதிச் செட்டியா ரவர்கள் யாழ்ப்பாணப் பகுதிக்கு விவாகப்பதிவாளராக இப்பொழுது நியமனம் பெற்றுள்ளாரென அறியலானேம்.

கே. ஸி. ஆக நியமிக்கப்பட்டுள்ள திரு. எஸ். ஜே. வீ. செல்வநாயகம் வருகிற வியாழக்கிழமை கொழும்பு உயர்தர நீதிமன்றத்தில் தமது புதிய பதவிக்கான பிரமாணிக்கத்தைச் செய்வார்.

0 0 0

கண்டி நகரசபை, பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தைக் கண்டித்து ஓர் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

0 0 0

இலங்கை இந்தியக் காங்கிரஸ், தனது சார்பாக 7 பேரை, வருகிற பாராளுமன்றத் தேர்தலில் அபேட்சகராக நிறுத்தியிருக்கிறது.

விளம்பரமின்றேற் பெரும்பணமில்லை

இந்திய அரசியல்

# லீக்கரின் பதவி வேட்டை

## ஜின்னுவுக்குப் பெரும் தலைவலி!

### பலுக்கிஸ்தானமும் சேர்ந்து

வடமேற் கெல்லைப்புறத்துக்கணித்தாகவுள்ள பலுக்கிஸ்தானமும் பாகிஸ்தானிற் சேரத் தீர்மானித்துவிட்டது.

O

### சிறுபான்மையினர்க்குப் பாதுகாப்பு

இந்தியா இப்போது பிரிக்கப்பட்டிருப்பதால், பாகிஸ்தானிலும் இந்தியச் சமஷ்டியிலும் இருக்கும் சிறுபான்மையினர் பிரச்சினை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. பாகிஸ்தானில் உள்ள ஹிந்துச் சிறுபான்மையினரையும், இந்தியச் சமஷ்டியில் உள்ள முஸ்லிம் சிறுபான்மையினரையும் இரு இராச்சிய அரசாங்கங்களும் பரஸ்பரம் உடன்படிக்கைமூலம் பாதுகாக்கவேண்டும் என்றும், அதற்கான பிரயத்தனங்களை உடனே செய்யவேண்டுமென்றும் இந்திய இடைக்கால அரசாங்கத்தில் காங்கிரஸ் அங்கத்தவராகவுள்ள மவுலானு அபுல்கலாம் அஸாத் அவர்கள் ஓர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

O

### பாகிஸ்தான் அரசாங்கம்

பாகிஸ்தான் அரசாங்கத்தை நிறுவுதற்கான வேலைகள் ஜுராகக் கராச்சியில் நடக்கின்றன. 4270 உத்தியோக அதிகாரிகள் இப்போதுள்ள இந்திய அரசாங்கத்திலிருந்து பாகிஸ்தான் அரசாங்கத்துக்கு மாற்றப்படுவர் என்று இப்போது தெரிவிக்கப்படுகிறது பல ஐரோப்பிய உத்தியோகத்தர் பாகிஸ்தான் அரசாங்கத்துக்கு உதவிசெய்ய முன்வந்திருக்கிறார்கள்,

O

### திருவாங்கூர் விஷயம்

திருவாங்கூர்ச் சமஸ்தானம் இந்தியச் சமஷ்டியிற்சேராமல் தனிச்சுதந்திர நாடாகத் தீர்மானித்ததைக் காங்கிரஸ் கண்டிக்கிறது. திருவாங்கூர்ப் பிரஜைகள் இந்தியாவில் எத்தனைபேர் இருக்கிறார்கள் என்பதை அறிய இந்திய அரசாங்கம் திட்டம்வகுத்திருக்கிறது. பொருளாதார விஷயமாகத் திருவாங்கூர்மீது இந்திய அரசாங்கம் நிர்ப்பந்தங்களை விதிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றையெல்லாம், திருவாங்கூர் திவான் சேர் ஸி. பி. இராமசாமிஐயர் சென்றவாரம் நிகழ்ந்த திருவாங்கூர்ச் சட்டசபையில் தெரிவித்து, எது வந்தபோதிலும் அதனைச் சமாளித்து எதிர் நடைவடிக்கை எடுக்கத் தான் தயார் என்று அறிவித்தார்.

O

### லீக்கரின் உத்தியோக வேட்டை

பாகிஸ்தான் அமைக்கப்பட்டதும், அந்தச் சுதந்திர நாட்டிலே பெரும் பதவிகளை வகிக்கலாம் என்று கனவு கண்ட லீக்கர் வாயில் இப்போது மண் வீழ்ந்துவிட்டது. இப்போதே அவர்களுக்கிடையே உத்தியோக வேட்டை ஆரம்பமாகிவிட்டது. மேற்குப் பாஞ்சாலத்திலே பிரதமர் பதவிக்கு, பாஞ்சால லீக் தலைவர் இப்திக்கர் ஹுஸைன், மிஸ்டர் பிரோஸ்கான் நூன், சர்தார் ஷவுக்கத் ஹயத் கான் என்பவர்களுக்கிடையே எதிரிடையேற்பட்டு, அவர்கள் தனித்தனி தமக்கு ஆதரவு தேடிவருகிறார்கள்; இவர்களில் யாரைப் பிரதமராக்கலாம் என்பதில் ஜின்னுவுக்கும் தலைவலி தோன்றிவிட்டது. இப்போதுள்ள நிலையில் பிரோஸ்கான் நூனுக்கே அதிக ஆதரவு இருப்பதாகத் தெரிகிறது. இது ஓர்புறம் இருக்க, பாகிஸதான் கிளர்ச்சியில் அதிக பங்கெடுத்த பல முஸலிம் லீக்கர் இந்தியாவிலேயே உளர். இவர்களுக்குப் பாகிஸதானில் எப்படிப் பதவிகளை அளிக்கலாம் என்பது ஜின்னுவின் இன்னொரு வேதனை. இவர்களை இராஜீகத் தூதுவராக அந்நிய நாடுகளுக்கு அனுப்பவும் ஜின்னு ஓர் திட்டம் வகுத்துவருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பண ்ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

க ட ன் .

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-47 (தி)

# இப்பொழுது எங்கள் கைவச முள்ளன!

சுத்தமான "பிறேக்" எண்ணெய்
ஸிமொனி ஸ்பொலிஷ்
ஹோர்-பல்ப்ஸ்
குட்ஸ்யர் வான்-பெல்ற்ஸ
(FanBelts)
மின்சாரப் பொருள்கள்

டுக்கோஸ பிறே வர்ணங்கள்
"சைக்கிள்"கள்
சைக்கிள்களில் தேவையான தனிப்பொருள்கள்
றேடியோக்கள்
ரயர் ரியூப்கள்

**T. N. லிங்கம் & ஸன்,**

எவ்வகையான மோட்டார் வண்டிகளுக்கும் சைக்கிள்களுக்கும் தேவையான பொருள்களும் தனிப் பொருள்களும் கொடுப்பவர்கள்; மின்சாரப் பகுதிக் கன்ருச்ரர்கள்.

தெலிவோன் இல. 108.
248, K. K. S யாழ்ப்பாணம்.
19-6-47 Std 23 24-6-47—22-7-47.

# பிரசித்த விளம்பரம்

பிறிமியர் ஶ்ரெட்டிச்சாய்ப்பின் கிளை ஸ்தாபனம் ஒன்று காங்கேசன் துறையிலே, யாழ்ப்பாணம் — காங்கேசன்துறைப் பெருந் தெருவிலுள்ள 210-ம், இலக்க இல்லத்தில் நிகழும் 1947—ம் ஆண்டு ஆனி மாசம் 11-ந் திகதி புதன்கிழமை தொடக்கம் திறக்கப்பட்டிருக்கிறது



அனைவோரும்இதனை ஆதரிக்கும்படியாய் பரிவாகக் கேட்கபபடுகின்ருர்கள்.

## பிறிமியர் பேக்கறி

(1865-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது)

பேதுருப்பிள்ளை ஶ்ரெட்டிச்சாய்ப்பெனப் பிரஸ்தாபமாக அறியப்படுவது

ஶ்ரெட்டி, பிஸ்கற்வகைகள், கேக்குகள் செய்து கொடுப்பதில் முதன்மைவாய்ந்தது

**யாழ்ப்பாணமும், காங்கேசன் துறையும்**

பேக்கறி,
தெலிபோன்:
யாழ்ப்பாணம், 44.

ஸ்ரோர்ஸ் & கவே,
தெலிபோன்:
யாழ்ப்பாணம், 63.

Std 22 6-6-47—6-7-47.


# திருச்சி ரேடியோ

செவ்வாய் யூலை 1

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எம் எம் மாரியப்பா பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 குரல்வகை 8-30 குன்னக்குடி வி வெங்கடராமையர் புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 130 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 ராமநாதபுரம் எம் என் நடராஜபிள்ளை புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2.05 ராமநாதபுரம் எம் என் நடராசபிள்ளை புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2.05 ராமநாதபுரம் எம் என் நடராசபிள்ளை புல்லாங்குழல் 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 எம் எம் மாரியப்பா பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 வாத்திய சங்கீதம் 7-15 மூன்றேட்டம் ஒலிச்சித்திரம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 டி ஏ நாகசாமி பாகவதர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.45 தென்னிந்திய நாட்டுப் பாடல்கள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9-45 குரல்வகை இசைத்தட்டு 10 நீங்கள் கேட்டவை 10. 0 முடிவு

புதன் யூலை 2

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 வி கே வேலுக்குட்டி நாயர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 இணை வாத்ய இசை இசைத்தட்டு 8-30 எம் ஆர் வாசவாம்பாள் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எம் ஆர் வாசவாம்பாள் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 எம் ஆர் வாசவாம்பாள் பாட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 கே வி ராஜாராமய்யர் புல்லாங்குழல் 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6-15 கிராம நிமழ்ச்சிகள் 7 நடனசிங்காரி நாடகம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 ரேடியோ வாத்ய கோஷ்டி 8 வி கே வேலுகுட்டி நாயர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 ஐரோப்பிய சங்கீதம் இசைத்தட்டு 10-30 முடிவு,

வியாழன் யூலை 3

காலை 7 15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 கடத்தூர் வெங்கடேசயர் சங்கராராமையர் வீணை 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 குரல்வகை இசைத்தட்டு 8-30 கும்பகோம் வி பி ராஜேஸ்வரி பாட்டு 9 முடிவு,

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கும்பகோணம் வி பி ராஜேஸ்வரி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 கும்பகோணம் பி வி ராஜேஸ்வரி பாட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 எம் ஏ கிருஷ்ணமூர்த்தி ஐயர் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7-15 செய்திவிளக்கம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 செய்திவிளக்கம் 8-20 நாட்டுப் பாடல்கள் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 ரேடியோ நாடகஇசை 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 கடத்தூர் வெங்கடேசய்யர் சங்காராமையர் வீணை 10-30 முடிவு.

வெள்ளி யூலை 4

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 சீதாமணி ஸ்ரீநிவாசன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருச்சி வாத்யகோஷ்டி 8 30 எம் ஆர் சிவராமன் நாயர் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 வேதாரண்யம் எம் பி ஸ்ரீனிவாசன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 வேதாரண்யம் எம் பி ஸ்ரீனிவாசன் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 சீதாமணி ஸ்ரீநிவாசன் பாட்டு 5-40 குரான் ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 டி என் ஆர் நடராசசுந்தரம் பிள்ளை நாகஸ்வரம் 7-30 தமிழில் செய்திகள் 7 45 ஷாப் இ பாத் பேச்சு 8 05 எம் ஆர் சிவராமன் நாயர் பாட்டு 8 30 டி என் ஆர் சுந்தரம்பிள்ளை நாகஸ்வாம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகை இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 எல் கணபதிபாபிள்ளை வயலின் 10 நீங்கள் கேட்டவை 10-30 முடிவு.

# ருஷியப் பூச்சாண்டி

1-ம் பக்கத் தொடர்ச்சி

லேவ் சொன்ன வார்த்தைகள் கர்ஸான் பிரபுவுக்குத் தலைவலியாகவிருந்தது. "மத்திய ஆசியாவில் ரஷ்யா எவ்வளவுக் கெவ்வளவு பலம் வாய்ந்ததாக விருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு, இந்தியாவில் இங்கிலாந்து பலவீன மடைந்ததாக இருக்கும். இன்னும் அது ஐரோப்பாவில் அதிக சுமுகமாக இருக்கும்." என்று அந்த ஜெனரல் கூறினர்.

ரஷயா இந்தியாவைப் பயமுறுத்தக் காரணம், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கொள்கையும், தனக்கு ஏதாவது பங்கு கிடைக்குமா வென்று பார்ப்பதற்காகவுமேதான். அதேபோல பங்கும் கிடைத்தது. 1907ம் வருஷத்தல் ஒருஉடன்படிக்கை ஏற்பட்டது. பாரஸீகத்தின் ஒரு பகுதியில் ரஷ்யாவுக்கு சலுகைகளும், பிரிட்டிஷாருக்கு ஆப்கானிஸ்தானத்திலும் கிடைத்தது. இதிலிருந்து ரஷ்யாவுக்குஇந்தியாமீது அக்கரையில்லையென்று தெரிகிறதல்லவா? முதல் யுத்தம் முடிந்த பிறகு ஜெர்மனிக்கு எதிராக ஆங்கிலோ ரஷ்ய ஒப்பந்தம் நடைபெற்றது அதன்மூலம் ரஷ்யாவுக்கு துருக்கி ஜலசந்தியிலும், கான்ஸ்டாண்டிநோபிளிலும் ஆதிக்கம் கிடைத்தது.

இப்பொழுது உலக நோக்கமே வேறு விதமாக இருக்கிறது. எங்குமுள்ள பொருளாதார நிலைமை, அரசியல் நெருக்கடி இவற்ருல் பிரிட்டிஷார் இந்தியாவைவிட்டு வெளியேற வேண்டியிருக்கிறது. ஆகையால் ரஷ்யா இந்தியாவைத் தாக்குமென்று சிலர் கருத்து. பயங்கொள்ளிகள் ரஷ்யர்களிடமுள்ள ஏராளமானசிகப்புப் படைகள், டாங்கிகள், பீரங்கிகள் முதலியவற்றைக் கண்டு யூரல் வழியாக, துருக்கிஸ்தான், ஆப்கானிஸ்தானமார்க்கமாக இந்தியாவரை வந்து சேருவார்கள் என்று அஞ்சுகின்றனர்,

ரஷ்யாப் படைகள் நாலா பக்கமும் பரவி, இந்தியச் சமதர்மிகளின் உதவியால் போலந்தையும், ருமேனியாவையும் ஆக்கிரமித்ததுபோல, இந்தியாவைப் பிடித்து விடுவார்கள என்பது அவர்கள் கனவு.

எந்தப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதியாகட்டும், ராணுவ அதிகாரியாகட்டும், இம்மாதிரிக் கதையைக் கிளப்புவார்களேயானல், குழந்தைகளைப் பயமுறுத்துகிற மாதிரிதான். ரஷ்யா படையெடுக்குமென்று நாம் சிறிதளவும் நினைகக மார்க்கமில்லை.

அப்படியே ரஷ்யா இந்தியாமீது பாய்ந்தால், உடனே அமெரிககாவும் பிரிட்டனும் ரஷ்யாமேரில் படையெடுக்கும். உலகமேநெருக்கடியான நிலையையிலிருக்கிறது. வல்லரசுகள் ஒவ்வொன்றும் மற்றையதின் லாபத்தைக் கண்டு பொருமைப்பட்டுக் கொண்டிருககிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஏதாவது ஏற்பட்டால், அவற்றின்லாபத்திறகுப் பங்கமே ஏற்படும்,

வான்முகில் வழாதுபெய்க மலி வளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்,

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday, July, 1, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org